Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,
THIRUKALUKUNDRAM.

Case No. CC.25/2025

**P.W**. 3(LW3)

| | |
|---|---|
| Name | : **திரு.விக்னேஷ்** |
| Father/Husband Name | : திரு, லட்சுமணன் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

எதிரி ஆஜரில் உள்ளார்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.06.2026

முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் தற்போது கடலூர் கிராமத்தில் குடியிருந்து மீன்பிடி தொழில் செய்து வருகிறேன். சாட்சிகள் லட்சுமணன் என்னுடைய அப்பா, கவிதா என்னுடைய அம்மா ஆவார்கள்.

2) கடந்த 21.10.2024ம் தேதி காலை 7.30 மணியளவில் நான் கல்லூரி செலவிற்காக ரூ.100/–ஐயும், ஒரு தங்க செயினையும் போட்டுக் கொண்டு நானும், என் நண்பரான ரவீந்தரன் பீரோவின் சாவியை பீரோ கதவில் வைத்துவிட்டு இரு சக்கர வாகனத்தில் சென்றுவிட்டோம். என் அப்பா மதியம் 1 மணிக்கு எனக்கு போன் செய்து வீட்டில் இருந்த பணமும் தங்க நகைகளும் காணாமல் போயிருந்ததாக சொன்னார். நான் வீட்டிற்கு வந்த பிறகு யார் வீட்டிற்கு வந்தார்கள் என்று என்னிடம் கேட்டபோது ரவீந்தரன் வந்ததை பற்றி என் அப்பாவிடம் சொன்னேன். இது சம்மந்தமாக என்

அப்பா கூத்தூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். இது சம்மந்தமாக போலிசார் விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –</u>**

நான் மாமல்லபுரத்தில் உள்ள தனலட்சுமி சீனிவாசன் கல்லூரியில் படித்து வருகிறேன். எங்கள் வீட்டில் நான், அப்பா, அம்மா மற்றும் அண்ணன் வசித்து வருகிறோம். நான் கல்லூரிக்கு செல்லும் போது நானும் ரவீந்திரனும் மட்டும் தான் வீட்டில் இருந்தோம். ரவீந்திரனை எனக்கு 4 வருடங்களாக தெரியும். ரவீந்திரன் எனது பக்கத்து ஊரை சேர்ந்தவர். அவர் என்னுடன் கல்லூரியில் படிக்கவில்லை. கல்லூரிக்கு செல்வதற்காக நானும் ரவீந்திரனும் வீட்டை பூட்டிவிட்டு சாவியை அங்கேயே வைத்துவிட்டு சென்றோம். வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை 10 நாட்கள் கழித்து விசாரணை செய்தார்கள்.

Taken down by me in open Court read over in the witness in the present of the accused and admitted by the witness to be correct.

(Sd)S.Vineeth
J.M./TKM.

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,
THIRUKALUKUNDRAM.

Case No. CC.25/2025

**P.W**. 4(LW4)

| | |
|---|---|
| Name | : திருமதி.ஜெனகா |
| Father/Husband Name | : திரு, தண்டபாணி |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

எதிரி ஆஜரில் உள்ளார்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.06.2026

முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் தற்போது கடலூர் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். சாட்சிகள் லட்சுமணன், கவிதா ஆகியோர் என் வீட்டிற்கு எதிர் வீட்டில் வசிக்கிறார்கள்.

2) சுமார் 2 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் காலையில் லட்சுமணன் மீன்பிடி தொழிலுக்காகவும், கவிதா மீன் வியாபாரம் செய்வதாக சென்றுவிட்டார்கள். அவர்களது மகன் விக்னேஷ் கல்லூரிக்கு சென்றிருந்தார். மதிய வேலையில் அவர்கள் வீட்டிற்கு வந்து பார்த்தபோது வீட்டில் திருடுபோய் இருந்ததாக கேள்விப்பட்டேன். அவர்கள் வீட்டிலிருந்த பீரோவில் சாவியை பீரோவிலேயே விட்டுவிட்டு சென்றுவிட்டதாக கேள்விப்பட்டேன். அவர்கள் திரும்பி வந்து பார்த்தபோது பீரோவின் கதவு திறந்திருந்ததாகவும் அதிலிருந்த பணம் ரூ.70,000/–மும், தங்க நகைகளும் காணாமல் போயிருந்ததாக கேள்விப்பட்டேன். காவல்

நிலையத்தில் புகார் கொடுத்திருந்ததாக கேள்விப்பட்டு தெரிந்துக் கொண்டேன். இது குறித்து போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –</u>**

நான் புகார்தாரர் லட்சுமணன் வீட்டிற்கு எதிர் வீட்டில் குடியிருந்து வருகிறேன். நான் சம்பவம் குறித்து கேள்விப்பட்டு தான் தெரிந்துக் கொண்டேன் என்றால் சரிதான். நேரடியாக எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

Taken down by me in open Court read over in the witness in the present of the accused and admitted by the witness to be correct.

(Sd)S.Vineeth
J.M./TKM.

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,
THIRUKALUKUNDRAM.

Case No. CC.25/2025

**P.W**. 5(LW5)

| | | |
|---|---|---|
| Name | : | **திரு.சம்பத்** |
| Father/Husband Name | : | திரு, குமார் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

எதிரி ஆஜரில் உள்ளார்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.06.2026

முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் தற்போது கடலூர் சின்னகுப்பம் கிராமத்தில் குடியிருந்து மீன்பிடி தொழில் செய்து வருகிறேன். சாட்சி மதிவாணன் என்பவரை எனக்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதல் சாட்சி கையொப்பம் என்னுடையது தான். கடந்த 07.11.2024 ம் தேதி மதியம் 11 மணியளவில் போலிசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு படம் வரைந்துக் கொண்டிருந்தார்கள். லட்சுமணன் என்பவர் வீட்டிலிருந்து நகையும் பணமும் காணாமல் போயிருந்ததாக சொன்னார்கள். இது சம்மந்தமாக போலிசார் விசாரணை செய்துக் கொண்டிருந்தார்கள். அதில் என்னையும் சாட்சி மதிவாணனையும் சாட்சியாக இருக்கும் படி கேட்டுக் கொண்டார்கள். அவர்கள் கேட்டுக் கொண்டதன் பேரில் நான் சாட்சியாக கையொப்பம் செய்தேன். **(பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு**

**செய்யப்படுகிறது).** போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> –

நான் 8ம் வகுப்பு வரை படித்துள்ளேன். சாட்சிகள் லட்சுமணன், கவிதா, விக்னேஷ் ஆகியோர் என்னுடைய உறவினர்கள். நான் கையொப்பம் செய்த பார்வை மகஜரில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. போலிசார் அதில் சம்பவ இடத்தில் திருடு போய் இருப்பதாக சொன்னார்கள். போலிசார் கேட்டுக் கொண்டதன் பேரில் நான் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றாலும், புகார்தாரர் என்னுடைய உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

Taken down by me in open Court read over in the witness in the present of the accused and admitted by the witness to be correct.
(Sd)S.Vineeth
J.M./TKM.

D E P O S I T I O N  O F  W I T N E S S
( Chapter XXIII Code of Criminal Procedure.)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,
THIRUKALUKUNDRAM.

Case No. CC.25/2025

**P.W**. 6(LW6)

| | |
|---|---|
| Name | : **திரு.மதிவணன்** |
| Father/Husband Name | : திரு, மகேந்திரன் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

எதிரி ஆஜரில் உள்ளார்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.06.2026

முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் தற்போது கடலூர் சின்னகுப்பம் கிராமத்தில் குடியிருந்து மீன்பிடி தொழில் செய்து வருகிறேன். சாட்சி சம்பத் என்பவரை எனக்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். சுமார் 2 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் போலிசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு படம் வரைந்துக் கொண்டிருந்தார்கள். லட்சுமணன் என்பவர் வீட்டிலிருந்து நகையும் பணமும் காணாமல் போயிருந்ததாக சொன்னார்கள். இது சம்மந்தமாக போலிசார் விசாரணை செய்துக் கொண்டிருந்தார்கள். அதில் என்னையும் சாட்சி சம்பத்தையும் சாட்சியாக இருக்கும் படி கேட்டுக் கொண்டார்கள். அவர்கள் கேட்டுக் கொண்டதன் பேரில் நான் சாட்சியாக கையொப்பம் செய்தேன். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை –

நான் 7ம் வகுப்பு வரை படித்துள்ளேன். சாட்சிகள் லட்சுமணன், கவிதா, விக்னேஷ் ஆகியோர் நான் வசிக்கும் தெருவில் வசித்து வருகிறார்கள். நான் கையொப்பம் செய்த பார்வை மகஜரில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. போலிசார் கேட்டுக் கொண்டதன் பேரில் நான் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றாலும், புகார்தாரர் என்னுடைய உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

Taken down by me in open Court read over in the witness in the present of the accused and admitted by the witness to be correct.

(Sd)S.Vineeth
J.M./TKM.